**OS.NO: 80/2024**

**PW 1 :** சிவகுரு, த/பெ.இராமசாமி

நாள் : 27.01.2026

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>5–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

நான் இந்த வழக்கு சொத்தை கிரையம் வாங்கிய நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் கிரையம் வாங்கிய சொத்தை ஒப்படைக்க வேண்டும் அல்லது இன்றைய தேதியில் கிரைய சொத்தின் சந்தை மதிப்பை என்னிடம் கொடுக்க வேண்டும் என்று கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பரிகாரங்களை தவிர வேறு எந்த பரிகாரததையும் நான் பிரதிவாதிகளுக்கு எதிராக கோரவில்லை என்று சொன்னால் சரிதான்.

இப்படி பரிகாரம் கோரித்தான் எனது வழக்கறிஞரை அனுகி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் கூறிய சங்கதிகளை அனுசரித்து தான் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் அந்த பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்த பிறகு தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

நான் 3 அயிட்ட சொத்துக்களுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அவைகள் இலுப்பை தண்டலம் என்ற கிராமத்தில் தான் உள்ளது. வழக்கு சொத்துகளுக்கு சர்வே எண் மற்றும் விஸ்திரனம் தெரியும். சர்வே எண்.64/1 -ல் 2 ஏக்கர் 71 சென்ட் சொத்திற்கும், சர்வே எண்.65 -ல் 0.98 சென்டிற்கும், சர்வே எண்.248/1 -ல் 2 ஏக்கர் விஸ்திரனம் சொத்திற்கும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

தாவா சொத்துக்கள் குறித்து எனது பெயரில் எந்த கிரைய ஆவணங்களும் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி தாவா சொத்து உயில் சாசனத்தின் அடிப்படையில் எனக்கு கிடைக்கப்பெற்றது.

எனது அத்தையின் கணவர் முத்து துரைசாமி முதலி எனக்கு எழுதி வைத்த உயில் சாசனத்தின் படி எனக்கு கிடைக்கப்பெற்றது என்று நான் கூறுகிறேன். முத்து துரைசாமி முதலி என் பெயருக்கு எழுதி வைத்த அசல் உயில் ஆவணத்தில் நீதிமன்றத்தில் தாங்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

மேற்படி அசல் உயிலை நீதிமன்றதில் தாக்கல் செய்யாதற்கான காரணத்தை நான் வழக்கில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. அதைப்பற்றி எனது வழக்கறிஞர் என்னை கேட்கவில்லை.

5 -ம் பிரதிவாதிக்கு எவ்வளவு விஸ்திரனம் கொண்ட சொத்தையும்

எந்த சர்வே எண்ணில் கொடுத்தேன் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

அதோ போல் 4 மற்றும் 6 ஆம் பிரதிவாதிக்கும் தாவா சொத்துக்கள் குறித்து கிரையம் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அவர்களுக்கும் எந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்திரனம் கொண்ட சொத்தை கிரையம் கொடுத்தேன் என்று என்னால் கூற முடியுமா என்றால் இல்லை.

நான் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்த சொத்துக்கள் குறித்த கிரைய ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை.

4 முதல் 6 பிரதிவாதிகள் அரிகில்பாடி கிராமத்தில் வசித்து வருகிறார்கள். இலுப்பை தண்டலம் கிராமத்திற்கும் அரிகில்பாடி கிராமத்திற்கும் இடைப்பட்ட தொலைவு 1 கால் கிலோ மீட்டர். எனக்கும் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்குமிடையே எந்த விரோதமும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

என்னிடம் இருந்து 4 முதல் 6 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்துகளுக்கு கிரையத்திற்கு பின்னிட்டு என்னுடைய பெயரில் எந்த ஆவணங்களும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

4 முதல் 6 பிரதிவாதிகளின் பெயர்களுக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா வழுங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் இந்த வழக்கில் எனது பெயரில் பட்டா இருப்பதாக கூறிதான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் கூறியது போல் எனது பெயரில் பட்டா எதுவும் வழங்கப்படவில்லை.

என்னிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்தை 5-ம் பிரதிவாதி பாலசந்திரனிடமிருந்து அரசு ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டு மனை வழங்குவதற்காக நில ஆர்ஜிதம் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான்.

அவ்வாறு 5-ம் பிரதிவாதியிடம் இருந்து கையகப்படுத்திய சொத்திற்கான நஷ்ட ஈட்டை 5-ம் பிரதிவாதி தான் அரசாங்கத்திடமிருந்து பெற்றுள்ளார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

5-ம் பிரதிவாதியிடமிருந்து அரசாங்கம் நில ஆர்ஜிதம் செய்யும் போது தனிவட்டாட்சியர், நில ஆர்ஜிதம் அவர்களுக்கு நான் ஏதாவது மனு கோடுத்தேனா என்றால் இல்லை.

மேலும், ஆர்ஜிதம் செய்த நிலத்திற்கு நஷ்ட ஈட்டு தொயையினை 5-ம் பிரதிவாதியிடம் கொடுக்கக் கூடாது என்று ஆட்சேபனையோ அல்லது நீதிமன்றத்தில் வழக்கு ஏதாவது தொடுத்தேனா என்றால் ஆர்ஜிதம் செய்த விவரம் பற்றி எனக்கு தெரியாததால் நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு நான் கிரையம் கொடுத்த தாவா "அ" அட்டவணை சொத்து அவர்கள் பெயரில் அரக்கோணம் சார்பதிவாளர் அலுவலகத்தல் ஆவண எண். 523/1987 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

மேற்படி கிரைய ஆவணத்தை வாதசாஆ.1 ஆக எனது தரப்பில் குறியீடு செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.01.27 17:00:56 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.